JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.559/2024
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது அலி | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | முகைதீன் பாட்சா | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | பொட்டல்புதூர் | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பொட்டல்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் பக்கத்து வீட்டுக்காரர். 1 வது எதிரியை தெரியும். 2 வது எதிரியின் மனைவி. அசா.1 மைதீன் மீராள் என்பவரை தெரியும்.சாட்சிகள் ஹன்சா பீவி, முபினா ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 16.07.2019 ம் தேதியன்று 17 மணியளவில் எதிரிகள் அசா.1 ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசினார்கள் என்றால் சரியல்ல, அசா.1 ஐ அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அசா.1 க்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi